2. அறிக்கை அளித்தல்

உறுப்பினர்கள் திரு. மு.க. ஸ்டாலின் மற்றும் திரு. துரைமுருகன் மீதான அவை உரிமைக் குழுவின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவை உரிமைக் குழுவின் அறிக்கையை அளித்தல். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், அவை உரிமைக் குழுவின் தலைவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் (பேரவைத் துணைத் தலைவர்): *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக கட்சியைச் சார்ந்த திருவாளர்கள் மு.க. ஸ்டாலின் மற்றும் துரைமுருகன் ஆகியோர் மீதான உரிமை மீறல் பிரச்சினை குறித்த அவை உரிமைக் குழுவின் அறிக்கையினை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

3. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

சென்னை மாநகர காவல் (சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி மாநகரங்களுக்கு நீட்டிப்பு) திருத்தச் சட்டமுன்வடிவு, 2014

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2014 ஆம் ஆண்டு சென்னை மாநகர காவல் (சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி மாநகரங்களுக்கு நீட்டிப்பு) திருத்தச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2014 ஆம் ஆண்டு சென்னை மாநகர காவல் (சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி மாநகரங்களுக்கு நீட்டிப்பு) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

4. அரசினர் தீர்மானங்கள்

உறுப்பினர்கள் திரு. மு.க. ஸ்டாலின் மற்றும் திரு. துரைமுருகன் மீதான அவை உரிமைக் குழுவின் பரிந்துரைகளை ஏற்றுக்கொள்ளுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"இன்று பேரவைக்கு அளிக்கப்பெற்ற திரு. மு.க. ஸ்டாலின், திரு. துரைமுருகன் ஆகியோர் மீதான அவை உரிமை மீறல் பிரச்சினை குறித்த அவை உரிமைக் குழுவின் அறிக்கையினை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 229 (ஆ)-வின்கீழ் இன்றே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*